திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இந்த பச்சையப்பன் அறக் கட்டளையை 1980 ஆம் ஆண்டு அரசினுடைய நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்த நேரத்தில் அங்கே பலவேறு தவறுகள் இருந்தன என்ற காரணத்தினால், அன்றைக்கு நிர்வாகத்திலே இருந்தவர்கள், குறைந்த வாடகை, நீண்ட காலக் குத்தகை, தகுதி பெறாத ஊழியர்களுக்கு பதவி உயர்வு, தகுதியற்ற ஊழியர்கள் நியமனம், தாறுமாறான நிர்வாகம், பலன் அளிக்காத தன்மைகள், யூ.சி.ஜி. மானியம் போன்றவைகள் பெற முடியாத நிலைமை இப்படிப் பல்வேறு தவறுகளை அவர்கள் செய்தார்கள். அதனால் அரசாங்கம் 2 ஆண்டு காலத்திற்கு தன்னுடைய பொறுப்பிலே எடுத்துக் கொண்டது. ஆனால் காலப் போக்கிலே நீடிப்பு செய்து கொண்டே வந்திருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், இன்றைக்கு நான் இந்த அரசைப் பார்த்துக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம் அரசாங்கம் இதற்கு முன்பு தன்னுடைய பொறுப்பிலே எடுத்துக் கொண்ட சமயத்தில் இருந்த நிலைமைகள் என்ன? பிறகு அரசாங்க அதிகாரிகள் பொறுப்பிலே இருக்கின்ற சூழ்நிலையிலே அதிலே என்னென்ன மாற்றங்கள் வந்திருக்கின்றன, என்னென்ன நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன என்ற விவரத்தை எல்லாம் அரசாங்கம் தெரிவிக்க வேண்டும்.

இதற்கு முன்புகூட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இன்றைக்கு பொதுப்பணித் துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள் அன்றைக்கு எதிர்க் கட்சியிலே இருக்கும்போது சொன்னார்கள். 'நீங்கள் 2 ஆண்டுக் காலத்திற்கு அதை அரசினுடைய பொறுப்பிலே எடுத்துக் கொள்கிறோம் என்று சொல்லிக் கொண்டு இருக்கின்றீர்கள், ஆனால் காலப் போக்கிலே இதை நீடித்துக்கொண்டே சென்றால் அது தவறு' என்று வாதித்து இருக்கிறார்கள். அன்றைக்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களும் 'அரசாங்கம் இதை மேலும் கால நீடிப்புச் செய்வது தவறு' என்று சொல்லியிருக்கிறார்கள்.

நான் அறிந்து கொள்ள விரும்புவதெல்லாம் இன்றைக்குள்ள சூழ்நிலையில், இன்றைக்கு வழக்கு மன்றத்திலே வழக்கானது நிலுவையிலே இருக்கின்றது. நாங்கள் மேனேஜ்மெண்டை மாற்றுவதற்காக, அந்த ஸ்கீமிலே சொல்லி மாற்றங்களைச் செய்வதற்காக ஹைக்கோர்ட்டிலே வழக்குப் போட்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதன் காரணமாக ஓராண்டு காலத்திற்கு நீடிப்புத் தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். நீதிமன்றத்திலே இருக்கின்ற வழக்கானது ஓராண்டு காலத்தில் முடிந்துவிடுமா? இன்னும் 5, 6 ஆண்டுகள் ஆகும். ஏன் அதை மறைத்து ஓராண்டு காலத்திற்கு மட்டும்தான் நீடிப்பு என்று கேட்கிறீர்கள். தேவை என்று சொன்னால் 5 ஆண்டு காலத்திற்கு என்று சொல்லுங்கள். இல்லை என்று சொன்னால் உடனடியாகத் தேர்தல் நடத்துங்கள். நான் திருத்தங்கள் கொடுத்திருக்